# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1286/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வேலுசாமி | த–பெ | பெரிய கருப்பன் |
| ஊர்: | : | தேலூர் | | |
| வயது: | : | 69/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------

**<u>குறுக்கு விசாரணை.</u>**

1. எனது சொந்த ஊர் தேலூர். சொந்த வீடு குடும்பம் அனைத்தும் தேலூரில் தான் உள்ளது. சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் 20.06.2019. சம்பவத்தினத்தன்று எதற்காக காரைக்குடி வந்தேன் என்றால் எனது தம்பி மகள் இறந்து விட்டது தொடர்பாக காரைக்குடி வந்தேன். எனது தம்பி குடும்பத்தாருக்கும் எதிரி குடும்பத்தராருக்கும் நகைகள் தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். நகைகளை கேட்பதற்காக எதிரியின் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். ஏற்கனவே நகைகள் குறித்து பிரச்சனை நிலுவையில் உள்ளது ஆகையால் வீட்டிற்கு செல்லவேண்டாம் என்று நான் எனது தம்பி மனைவியை அறிவுறுத்தினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த நாளில் எதிரி காவல் நிலையத்தில் சீர்பொருட்களை ஒப்படைப்பதாக சொல்லியிருந்தார் என்றால் சரிதான் ஆனால் அவர் அது போல் செய்யவில்லை. அதை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் காவல் நிலையத்தில் விசாரித்தபோது தெரிந்து கொண்டேன். எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் மதியம் 03.00 மணிக்கு தெரிந்து கொண்டேன். நான் எனது தம்பியின் வீட்டிற்கு வந்தபோது யார் யார் இருந்தார்கள் என்றால் எனது தம்பி, அவரின் மனைவி, தம்பியின் மகன், மகள் ஆகியோர்கள் இருந்தார்கள்.

2. நான் ஏன் எனது தம்பியை காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றால் எனது தம்பி சரியாக பேச மாட்டார் என்பதற்காக அழைத்து செல்லவில்லை. தம்பியின் மகனையும் அழைத்து செல்ல நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரியின் வீட்டின் முன்பு என்ன கேட்டீர்கள் என்றால் எனது தம்பி மகள் இறந்து விட்டதால் அவருக்கு திருமணத்தின்போது அணிவித்த நகைகள் மற்றும் சீர் வரிசை சமான்களை திரும்ப தருமாறு கேட்டேன். அவ்வாறு கேட்டதற்கு எதிரி என்ன சொன்னார் என்றால் அவர்

தர முடியாது என்று மறுத்துடன் அசா1 ஐ  தாக்கிவிட்டார். சம்பவத்தின் போது பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரேனும் வந்தார்களா என்றால் யாரும் வரவில்லை. நாங்கள் பின்பு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டோம். காவல் நிலையத்திற்கு சென்று அன்றைய தினமே புகார் அளித்தோமா என்றால் மறுநாள் அளித்தோம். என்ன புகார் அளித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது நான் ஊருக்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த பின்னர் 20 நாட்கள் கழித்து சமரசம் பேச்சு வார்த்தை நடத்தியபோது நான் வந்தேனா என்றால் வந்தேன். அப்போது ஒரு ஒப்பந்தமாக எழுதி கையொப்பம் செய்தார்களா என்றால் செய்தார்கள். குழந்தைகளை வாரத்தில் ஒரு நாள் புகார்தாரரிடம் காண்பிக்க வேண்டும் என்று இருந்தது ஆனால் அவர்கள் குழந்தைகளை காண்பிக்கவில்லை. மேற்படி வாசகம் ஒப்பந்தத்தில் இல்லை என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் இவ்வழக்கை வாபஸ் பெற்று கொள்வோம் என்று சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். ஒப்பந்தத்தில் சொல்லியுள்ளவாறு குழந்தைகளை காண்பிக்கவில்லை என்றால் காவல் நிலையம் சென்று தான் புகார் அளித்திருக்க வேண்டும் அவ்வாறு செய்யாமல் எதிரியின் வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்யக்கூடாது என்றால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடைபெறவில்லை அசா1  கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.09 13:25:15 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1286/2022 P.W.1**

| பெயர்: | : | மணிமேகலை | க–பெ | ராஜேந்திரன் |
|---|---|---|---|---|
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 55/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2026**
**எதிரிகள் ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------------

குறுக்கு விசாரணை.

1. என்னுடைய சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருவாடணை தாலுகாவில் உள்ள தேலூர். எனது கணவருக்கும் மேற்படி ஊரே சொந்த ஊர். காரைக்குடி சூடாமணிபுரத்தில் சுமார் 10 வருடமாக வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். எனக்கு 2 மகள் மற்றும் 1 மகன் உள்ளார்கள். அனைவரும் காரைக்குடியில் தான் உள்ளார்கள். மூத்த மகள் உஷாராணியை 1 வது எதிரி ரமேஷ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளார்கள். இரண்டாவது மகள் உமாதேவி திருமணம் செய்துவைத்து காரைக்குடியில் உள்ள எங்கள் வீட்டில் தான் குடியிருந்து வருகிறார்கள். எனது மகன் வெளிநாட்டில் வசித்து வருகிறார். 2019 ஆம் ஆண்டு சென்னையில் படித்து கொண்டிருந்தார்.

2. இந்த வழக்கில் சாட்சியான அசா2 யார் என்றால் எனது கணவரின் உடன் பிறந்த மூத்த சகோதரர். அவர்களின் குடும்பம் தேலூரில் தான் உள்ளது. வழக்கின் சாட்சி 3 பால்கரசு யார் என்றால் எனது மகள் உமாதேவியின் கணவரின் உடன் பிறந்த சகோதரர். வழக்கின் சாட்சி 4 யார் என்றால் எனக்கு உறவினர் மற்றும் தம்பி முறை ஆவார். நான் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். இந்த வழக்கின் மூன்றாம் எதிரி பரிமளாதேவி திருமணம் ஆகி குடும்பத்துடன் காரைக்குடி சுப்ரமணியபுரத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2 வது எதிரி பூமயில் 1 வது எதிரியின் அம்மா 1ம் எதிரியுடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2011 ம் ஆண்டு எனது மகளுக்கு திருமணமாகி எட்டு வருட காலமாக நன்றாக தான் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவர்களுக்குள் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் அவ்வவ்போது பிரச்சனை வரும். அது தொடர்பாக எவ்வித காவல் நிலையத்தில் புகார் அளிக்க வில்லை என்றால் சரிதான். எனது மூத்த மகள் தற்கொலை செய்து கொண்ட வீட்டின் அருகில் உள்ள மளிகை கடையில் இருந்து பேசினார். நான் உடனே வீட்டிற்கு சென்று பார்த்துவிட்டு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன் என்றால்

நான் போகும் முன்னரே காவல் நிலையத்தில் இருந்து விசாரணைக்கு வந்திருந்தார்கள். நான் சென்று குழந்தைகளை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். வீட்டில் குழந்தைகளை தவிர எதிரிகள் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் இருந்தார்கள். 1வது எதிரி எங்கு சென்றிருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இது தொடர்பாக எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள்.

3. இது சம்பந்தமாக தேவக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு விசாரணைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. மேற்படி தேவக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் எதிரியையும் மற்றும் பிற சாட்சிகளையும் விசாரணை செய்தார்கள் விசாரணையின் முடிவில் எதிரியின் மீது குற்றமுகாந்திரம் எதுவும் இல்லை என்று சொல்லி கோட்டாட்சியரின் அறிக்கையின் பேரில் காவல் நிலையத்தில் மேற்படி வழக்கை முடித்து விட்டார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது புகார் அளித்தது நான் தான் என்னை விசாரணை செய்யவில்லை. எதிரி மீது கொடுத்த வழக்கு சம்பந்தமாக எதிரி மீது எவ்வித வழக்கும் பதிவு செய்யாததால் எனது மகளுக்கு நான் சீராக செய்த நகைகளையும் சீர் சமான்களையும் ரொக்க பணத்தையும் எதிரியிடம் இருந்து பெற்று தருமாறு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரை யார் விசாரணை செய்தார்கள் என்றால் காரைக்குடி வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் தினேஷ் என்பவர் விசாரரணை செய்தார்.

4. மேற்படி சார்பு ஆய்வாளர் தினேஷ் என்பவர் எங்கள் ஊருக்கு அருகில் உள்ள கீழ்குடி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் தினேஷ் மற்றும் எனது குடும்பத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே நல்ல பழக்கம் என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் தினேஷ் மற்றும் எனது குடும்பத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே நல்ல பழக்கம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில் எதிரி நகைகளை காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் வழக்கு பதிந்து சிறைக்கு அனுப்பி விடுவதாக நானும் எனது சார்பாக சார்பு ஆய்வாளரும் மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு மிரட்டியதால் எதிரி நகைகளையும் சீர் சமான்களையும் நீதிமன்றத்தில் தான் ஒப்படைக்க வேண்டும் அல்லது எங்கள் ஊர் பெரியோர் முன்னிலையில் தான் ஒப்படைப்பேன் என்று கூறியதால் மேற்படி நகைகள் சம்பந்தமாக 1 வது எதிரி வங்கி லாக்கரில் வைத்துள்ளேன் என்றும் பெரியோர் முன்னிலையில் நகைகளை கொடுப்பதாக கூறியதன் பேரில் கடந்த 20.06.2019 அன்று காலை 9.30 மணியளவில் காவல் நிலையத்திற்கு சென்று தனக்கு வேண்டிய கிராமத்தார்கள் முன்னிலையில் நகைகளை ஒப்படைப்பதற்காக சென்றபோது சார்பு ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு கிராமத்தார்கள் யாரும் வரக்கூடாது என்றும் நீ மட்டும் உள்ளே வரவேண்டும் என்றும் லாக்கரில் உள்ள நகைகளை எடுத்து என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அதற்காக எதுவும் எழுதி தர முடியாது என்றும் மிரட்டினார் என்றும் அதனால் எதிரி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்பதால் நானும் சார்பு ஆய்வாளரும் ஒன்று கூடி எதிரி மீது வழக்கு பதிவு செய்து சிறைக்கு அனுப்ப முடிவு செய்து எதிரி மீதும் மற்ற எதிரிகள் மீதும் பொய் வழக்கு பதிவு செய்து 1ம்

எதிரியை சிறைக்கு அனுப்பி விட்டார்கள் என்றும் சொன்னால் சிறைக்கு அனுப்பியது உண்மை மற்ற விபரங்கள் அனைத்தும் சரியல்ல.

5. 20.06.2019 அன்று எதிரி வீட்டிற்கு சென்று நான் நகைகளை கேட்டதாக சொல்லியதற்கு யார் யாருடன் சென்றேன் என்றால் எனது மச்சான் உடன் சென்றேன். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எனது மச்சானின் இருசக்கர வாகனத்தில் சென்றோம். எனது கணவர் எனது வீட்டில் தான் இருந்தார். மன உளைச்சல் காரணமாக என்னுடன் வரவில்லை. எனது கணவர் புகார் அளிக்க காவல் நிலையம் வந்தாரா என்றால் இல்லை. புகார் தொடர்பாக எனது கணவரை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. புகார் தொடர்பாக என்னையும் எனது மச்சானையும் விசாரணை செய்தார்கள். எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் நியாபகம் இல்லை. எங்கள் இருவரை தவிர வேறு யாரையும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எதிரி வீட்டின் அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். பிரச்சனை நடந்தது குறித்து யாரும் விலக்கிவிட வந்தார்களா என்றால் இல்லை எனது மச்சான் தான் விலக்கி விட்டார். நடந்த சம்பவம் வேறு யாருக்கும் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவமானது வீட்டிற்குள் எந்த பகுதியில் நடைபெற்றது என்றால் வீட்டின் ஹால் பகுதியில் நடைபெற்றது.

6. நான் ஏற்கனவே எதிரி மீது புகார் அளித்திருந்தும் நகைகளை தர மறுத்த பின்னரும் நான் நகைகளை கேட்டு எதிரி வீட்டிற்கு சென்றதாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. புகாரை எழுத்து மூலமாக எழுதிகொடுத்தேனா என்றால் எழுத்து மூலமாக தான் எழுதிகொடுத்தேன். புகாரில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். எத்தனை பக்கம் புகார் எழுதினேன் என்றால் ஒன்றரை பக்கம் எழுதினேன். புகாரை எழுதியது நான் தான் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை எவ்வாறு எழுத வேண்டும் என்று யார் சொன்னார்கள் என்றால் காவல் நிலையத்தில் உள்ள காவலர்கள் சொன்னார்கள் அதன் படி நான் எழுதினேன். நான் புகார் அளித்த உடன் எதிரி காவல் நிலையம் வந்தாரா என்றால் எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரியை கைது செய்ததாக காவல் நிலையத்தில் இருந்து தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. எதிரியை கைது செய்தது தொடர்பாக தெரிந்து கொண்டேனா என்றால் எதிரி சிறையில் இருப்பதாக எனது கணவர் காவல் நிலையத்திற்கு வந்து தெரிந்து கொண்டார். எதிரி சிறைக்கு சென்றுவிட்டு வந்த பின்னர் நானும் எனது கணவரும் மேற்படி விபரங்களை கூறி எதிரி வேலை செய்யும் அஞ்சல் அலுவலகத்தில் எதிரியை பணி நீக்கம் செய்யுமாறு மனு கொடுத்தோம் மனுவின் பேரில் எதிரி பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான்.

7. எதிரி சிறையில் இருந்து வந்த பின்னர் 20 நாட்கள் கழித்து என்னுடைய வழக்கறிஞர் மூலமாகவும் எதிரியின் வழக்கறிஞர் மூலமாகவும் நகைகளை பெறுவதற்கு சமாதானம் பேசினோம் என்றால் சரிதான். எங்கள் இருதரப்பையும் வைத்து எதிரியின் வழக்கறிஞர்கள் இருவரும் எங்கள் இருதரப்பு வேண்டியவர்களை வைத்தும் சமாதானம் பேசியதில் என் மகளுக்காக நான் கொடுத்த நகைகள், சீர் சமான்கள் ரொக்க பணம் ஆகியவற்றை 1ம் எதிரி எங்கள் வசம் ஒப்படைக்கவேண்டும் என்றும் எங்களுடைய பராமரிப்பில் இருந்து வந்த எதிரியின் இரண்டு குழந்தைகளையும்

எதிரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் நாங்கள் எதிரி மீது கொடுத்த இவ்வழக்கை காவல் நிலையத்தில் வாபஸ் பெற்று கொள்கிறோம் என்றும் எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சமாதானம் பேசிய பின்பு 26.07.2019 அன்று கையொப்பம் செய்து கொண்டதால் குழந்தைகளை காட்ட வேண்டும் என்றும் காட்டவில்லை என்றால் வழக்கை வாபஸ் வாங்க மாட்டேன் என்றும் சொல்லியுள்ளேன். குழந்தைகளை காட்டவில்லை என்பது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. எனது கணவர் குழந்தைகளை கேட்டு எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரி குழந்தைகளை பெரியோர் முன்னிலையில் காண்பிக்கிறேன் எனது கணவரிடம் காண்பிக்க முடியாது என்றும் கூறியதால் எனது கணவர் எதிரியை 25.07.2020 அன்று அடித்து காயப்படுத்தியுள்ளார் அது சம்பந்தமாக எதிரி வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார் அதற்கு எனது கணவர் மீது காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை நீதிமன்றத்திற்கு சென்று நிவாரணம் செய்து கொள்ளுமாறு சொன்னார்கள் என்றால் காவல் நிலையத்தில் விசாரணை செய்து கையொப்பம் பெற்று கொண்டு விட்டுவிட்டார்கள். புகார் மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் முற்றிலும் பொய் என்றும் அவ்வாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி நகைகள் மற்றும் சீர் பொருட்களை கொடுக்க மறுத்ததால் அவர் மீது பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.09 13:25:31 +0530

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.